**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை – ஆகஸ்ட் – 2021**
**A061 நாட்டுப்புறவியல்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. வாய்மொழி இலக்கியம் என்றால் என்ன?
2. கதைப்பாடல் அமைப்பின் முக்கியப் பகுதிகள் யாவை?
3. மின்னணுச் சாதனங்கள் எவை?
4. இராமப்பய்யன் அம்மானை – எந்தக் காலகட்டத்து வரலாற்றைச் சுட்டுகின்றது.
5. பெண்ணைக் கதைத்தலைவியாகக் கொண்ட கதைப்பாடல் எது?
6. எத்தனை நாட்களுக்குள் பவளத்தேர் கொண்டு வருவதாக அருச்சுனன் கூறிச் சென்றான்?
7. சமண சமயக் கதைப்பாடல் இரண்டின் பெயரினைச் சுட்டுக.
8. மறைபொருளை உள்ளடக்கிய அமைத்தையும் சுட்டும் பொதுச்சொல் எது?
9. நாட்டுப்புறப் பாடல்களைக் குறிக்க, தொல்காப்பியர் எந்த சொல் அல்லது சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்?
10. தொழிற்பாடல்கள் பாடப்படுவதன் நோக்கம் யாது?
11. தமிழகத்தில் பரவலாகக் காணப்படும் கும்மி வடிவம் எது?
12. தமிழர் தம் இருவகைத் திருமண முறைகள் எவை?
13. சித்திரைத் திருவிழா நடைபெறும் ஊர் எது?
14. முதல் சித்தராகக் கருதப்படுபவர் யார்?
15. பூப்பறிக்க வருகிறோம் விளையாட்டை ஆடுவோர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. தொடக்க காலத்தில் நாட்டுப்புறவியலின் வளர்ச்சிக்குத் துணை செய்த இதழ்கள் யாவை?
2. நாட்டுப்புற இலக்கியத்தின் (Folk Literature) சிறப்புகள் யாவை?
3. நாட்டுப்புறக் கதைகளுக்கும் கதைப்பாடல்களுக்கும் உள்ள வேற்றுமை என்ன?
4. பகைவனும் பாராட்டும் வீரமுடையவன் தேசிங்கு என்பதை உம் பாடப்பகுதி கொண்டு சுட்டுக.
5. அருச்சுனன் மீது அல்லி எதற்காகப் போர் தொடுக்கின்றாள்?
6. வெடி, அழிப்பாங்கதை ஆகிய சொற்கள் தமிழகத்தின் எவ்வெப்பகுதிகளில் வழக்கில் உள்ளன?
7. பழமொழிக்கு வரையறை கூறிய தொல்காப்பிய நூற்பாவிற்குத் தே. லூர்து கூறிய விளக்கத்தினைத் தொகுத்துச் சுட்டுக?
8. நாட்டுப்புற நம்பிக்கைகள் எவ்வாறு பகுக்கப்பட்டுள்ளன?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) நாட்டுப்புறவியல் வரலாற்றைத் தொகுத்தெழுதுக.

   (அல்லது)

   (ஆ) சடங்குகளும் நம்பிக்கைகளும் நாட்டுப்புற மக்களின் வாழ்வில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை விளக்குக.

2. (அ) நோய்களும் நாட்டுப்புற மருத்துவமும் குறித்து எழுதுக.

   (அல்லது)

   (ஆ) நாட்டுப்புற நிகழ்த்து கலைகள் – நிகழ்த்தப்படும் சூழல் குறித்து விளக்குக.

3. (அ) நாட்டுப்புற விளையாட்டுகளை வகைப்படுத்தி விளக்குக.

   (அல்லது)

   (ஆ) தஞ்சை வளர்க்கும் கலைகள் குறித்து ஆராய்க.

***